**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்**

**அ.வ.எண். 201/2011**

12.04.2018

**பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டார். 18, 20, 34 முதல் 37 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-**

18 ம் பிரதிவாதி சிவசக்திபுரத்தில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். அவர் குடியிருக்கும் இடத்திற்கும், நான் குடியிருக்கும் குட்டரைக்கும் இடையே 2 கிலோமீட்டர் தூரம் இருக்கும். சிவசக்திபுரத்தில் யார் யார் குடியிருக்கிறார்கள் என்கிற விவரம் ஓரளவிற்கு எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். 18 ம் பிரதிவாதி தாவாச் சொத்தில் பொதுவில் பு.ஏ.2.19 ½ செண்டை 29.09.2010 ம் தேதி கிரயம் பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 18 ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்துக்கள் நீங்கலாக பூர்வீக சொத்து சுமார் 4 ஏக்கர் பூமி இருப்பது தெரியுமா என்றால் தெரியாது. 18 ம் பிரதிவாதி கிரயம் பெற்றபோது தாவா காலைகள் அனைத்தையும் குறிப்பிட்டு பொதுவில் பு.ஏ 2.19 செண்டை கிரயம் பெற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சொத்துக்கள் அனைத்தும் நாளதுவரை பாகக்கரார் செய்யப்படாமல் இருக்கிறது என்றும், 18 ம் பிரதிவாதி பெற்ற கிரயத்தை தெரியும் என்று ஒப்புக்கொண்டால் நான் முன்வைக்கும் வாய்மொழி பாகப்பிரிவினை பொய்யாகிவிடும் என்பதால் அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. 20 ம் பிரதிவாதி பொன்னுச்சாமியை எனக்குத் தெரியும். அவரது சகோதரர் கோவிந்தசாமி என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, குழந்தைசாமி என்று ஒரு சகோதரர் இருப்பது பற்றி எனக்கு தெரியும். 20 ம் பிரதிவாதி பொன்னுச்சாமியைத் தவிர தாவாச் சொத்தில் வேறு ஒரு பொன்னுச்சாமி என்ற நபரும் இருக்கிறார். 20 ம் பிரதிவாதியின் உடன் பிறந்த சகோதரர் கோவிந்தசாமி இறந்துவிட்டார் என்றும், அவருடைய வாரிசுகளிடமிருந்து 18 ம் பிரதிவாதி கிரயம் பெற்றுள்ளார் என்றும், அதைத் தெரிந்துகொண்டு கோவிந்தசாமி என்பவரைப்பற்றி தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கருணையம்மாள், ஜோதிபாசு மற்றும் பூங்கொடி ஆகியோரைத் தெரியுமா என்றால் தெரியும்.

கருணையம்மாளின் கணவர் பெயரும், ஜோதிபாசு மற்றும் பூங்கொடி ஆகியோரின் தகப்பனார் பெயரும் எனக்குத் தெரியாது. கருணையம்மாள், ஜோதிபாசு மற்றும் பூங்கொடி ஆகியோர்தான் இறந்துபோன கோவிந்தசாமியின் வாரிசுகள் என்பதை ஒப்புக் கொண்டால் 18ம் பிரதிவாதி பெற்ற கிரயத்தையும் ஒப்புக்கொண்டதுபோல் ஆகிவிடும் என்பதால், அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன கோவிந்தசாமி மற்றும் 20 பிரதிவாதி பொன்னுச்சாமியின் தகப்பனார் நாச்சிமுத்துக்கவுண்டருக்கு 25.07.1971ம் தேதிய கிரயப்படி தாவாச் சொத்துக்களில் மொத்த விஸ்தீர்ணம் பு.ஏ.93.27 ல் பொதுவில் பு.ஏ.18.65 விஸ்தீரணத்தில் பொதுவில் பு.ஏ.4.66 பாத்தியம் என்பது பற்றி தெரியுமா என்றால் நிறைப்பேருக்கு விற்று வாங்கியிருப்பதால் சரியாக முழு விவரம் தெரியாது. மேற்படிப நாச்சிமுத்துக் கவுண்டர் இறந்த பின்னிட்டு 20ம் பிரதிவாதி பொன்னுச்சாமிக்கும், அவரது சகோதரர் இறந்துபோன கோவிந்தசாமிக்கும் தலா 2 ஏக்கர் 33 செண்ட் பாத்தியம் ஏற்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி தெரியாது. சொத்துக்கள் அனைத்தையும் பாகஸ்தர்களுக்குள் நிரந்தர பாகப்பிரிவினை ஏதும் ஏற்படாததால் 18ம் பிரதிவாதி சொத்துக்களை பொதுவில் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. சிக்காம்பாளையம் அம்மணியப்பக்கவுண்டர் மகன் கோவிந்தசாமிக்கவுண்டரை தெரியுமா என்றால் பாகஸ்தர்கள் நிறையப்பேர் இருப்பதால் அதுபற்றி எனக்கு தெரியாது. சிக்காம்பாளையம் அம்மணியப்பக்கவுண்டர் மகன் கோவிந்தசாமிக்கவுண்டர் இவ்வழக்கில் 15ம் பிரதிவாதி என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. 15ம் பிரதிவாதிகளின் வாரிசுகள்தான் 34 முதல் 37 பிரதிவாதிகள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 18ம் பிரதிவாதி, 20ம் பிரதிவாதி மற்றும் 34 முதல் 37 பிரதிவாதிகள் இவ்வழக்கில் என்ன எதிர்வாதம் செய்துள்ளார்கள் என்பது பற்றி தெரியுமா என்றால், சொத்துக்கள் பொதுவில் இருப்பதாக எதிர்வாதம் செய்திருக்கிறார்கள். நான் சொல்லுவதுபோல் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டிருந்தால் பிரதிவாதிகள் 18, 20 மற்றும் 34 முதல் 37 ஆகியோர் இவ்வழக்கு சொத்துக்கள் பொதுவில் இருப்பதாக எதிர்வாதம் செய்திருக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சொத்துக்கள் நாளதுவரை பொதுவில்தான் உள்ளது என்றும், நான் கூறும் வாய்மொழி பாகப்பிரிவினை பொய் என்றும் சொன்னால் சரியல்ல.

அதனால் என்னுடைய எதிர்வாதம் நிராகரிக்கப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**